

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

செவ்வாய்க்கிழமை 29.04.2025

# பரவட்டும் பாவேந்தர்!



தமிழ் மொழிக்கு பாவேந்தர் - திராவிட இயக்கத்தின் புரட்சிக் கவிஞர் - தமிழினத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் போற்றும் வகையில் ஏப்ரல் 29 முதல் மே 5 வரை ஒரு வார காலத்திற்கு தமிழ் வார விழா கொண்டாடப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

**“வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும் என்றார் பாவேந்தர். அத்தகைய எழுச்சியை இந்த விழாக்கள் உருவாக்க வேண்டும். கடல் போலச் செந்தமிழைப் பரப்ப வேண்டும் என்றார் பாவேந்தர். செந்தமிழைப் பரப்ப இந்த விழாக்கள் பயன்படும். வையம் ஆண்ட வண்டமிழ் மரபே உன் கையிருப்பைக் காட்ட எழுந்திரு என்றார் பாவேந்தர். தமிழர் தம் அறிவுச் செல்வத்தைக் காட்ட இந்த விழாக்கள் பயன்படும்” என்று அறிவித்திருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.**

தமிழாட்சி - தமிழினத்தின் ஆட்சி - நடந்து வருகிறது என்பதற்கு இதுவும் ஒரு சாட்சியாகும்.

**‘வள்ளுவருக்கு அடுத்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைத்தான் வைக்க வேண்டும்’** என்று சொன்னவர் தந்தை பெரியார். பாவேந்தரின் பாடல்களை முதலில் திரட்டி, முதல் தொகுப்பை 1937 ஆம் ஆண்டே கொண்டு வந்தவர் குத்தூசி குருசாமி. 1928 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார் பாவேந்தர். 1938 இந்தி எதிர்ப்பு பேரியக்கத்துக்கு பாவேந்தர் எழுதித் தந்த பாட்டே போர்ப்பாட்டு ஆனது.

**“பாரதிதாசன் கவிதைகள் என்னும் புத்தகம் தமிழ்நாட்டுக்கு ஒரு சிறந்த பொக்கிஷமாகும். தோழர் பாரதிதாசன் அவர்கள் தமிழ்நாட்டிற்கு புதியவரல்ல. அவர் சென்ற 10 ஆண்டுகளாகச் சுயமரியாதை இயக்கத்தில் தீவிரமாய் ஈடுபட்டு வருகின்றார். அவர் சுயமரியாதை இயக்கத்தின் ஒப்பற்ற கவி. இந்த ஒரு காரணத்தினாலேயே அவர் இன்று தமிழ்நாட்டின் சிறந்த கவியாயிருந்தும் அவருடைய புகழ் போதுமான வரையில் பரவாமல் இருக்கிறது. ஆனால் அவர் மட்டும் வெறும் புகழை விரும்பினார் ஆனால் காலத்திற்கும் பாமர மக்கள் உணர்ச்சிக்கும் ஏற்றவாறு தம் கருத்துக்களை மாற்றிக் கொண்டு மிகச் சிறந்த கவி என்ற பெயரை எளிதில் பெற்றுவிடலாம். ஆனால் உண்மை நியாயம், அறிவு முதலியவற்றைச் சிறிதும் விற்றுக் கொடுக்க இசையாத இயற்கையான ஒரு பிடிவாத முடையவராதலால் அவர் புகழை எதிர்பாராமல் தம் கொள்கைகளில் விடாப்பிடியாய் இருந்து வருகிறார். இக்குணத்தை நான் அவரிடம் பல தடவைகள் கண்டிருக்கின்றேன்”** என்று அந்நூலுக்கு எழுதிய மதிப்புரையில் குறிப்பிட்டார் தந்தை பெரியார்.

**“ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளாகக் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருந்த தமிழகத்தை நன்னிலை நோக்கி நடத்தக் கிடைத்த தலைவர் ஒருவரே, அவர் தாம் நம் பெரியார்..”** என்று எழுதினார் பாவேந்தர்.

**‘தொண்டு செய்து பழுத்த பழம் -**
**தூய தாடி மார்பில் விழும் -**
**மண்டைச் சுரப்பை உலகு தொழும்**
**அவர் தாம் பெரியார்’**

- என்று எழுதினார் பாவேந்தர் பாரதிதாசன். நூற்றாண்டு உழைப்பை பத்தே வரியில் சொன்னவர் பாவேந்தர்.

1942 ஆம் ஆண்டு ‘திராவிடநாடு’ இதழை பேரறிஞர் அண்ணா தொடங்கினார். முகப்பில், **‘தமிழுக்கு அமுதென்று பேர் - அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்’** என்ற பாரதிதாசன் வரிகள்தான் எழுதப்பட்டது. பாவேந்தருக்கு நிதி திரட்டி அளித்தவர் பேரறிஞர் அண்ணா.

1941 ஆம் ஆண்டு ‘தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்’ தொடங்கினார் தலைவர் கலைஞர். தமிழ் மாணவர் மன்றத்தில் ஆண்டு விழாவுக்கு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் அனுப்பிய வாழ்த்துப்பா உணர்ச்சிக் கவியாக அமைந்தது.

**“தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்**
**தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றங்காண்”** என்று தொடங்கும் கவிதை -
**“கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்**
**கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை”** என்று முடியும். இப்படி தமிழச் சிங்கக் கூட்டத்தை தமிழ்நாட்டில் உருவாக்கியவை பாவேந்தரின் கவிதைகள். அவரது ஒவ்வொரு வரியும், ஓராயிரம் பேரை உணர்ச்சி கொள்ள வைத்திருக்கும். வரிக்கு வரி, வரிப்புலி வார்த்தைகளை வடித்துத் தந்தவர் பாவேந்தர்.

**“இவனொரு சுருட்டுக் கவிஞன் - புகைச்**
**சுருட்டுக் கவிஞன் - இவன்**
**புரட்டுக் கவிஞனாவான்;**
**மூடப்பழக்கமெல்லாம் தலைகீழா**
**புரட்டும் கவிஞனாவான்.**
**கருத்துக் கவிஞன்; சற்று கருத்த கவிஞன்.**
**காலக் கவிஞன் ; முக்காலக் கவிஞன்”** - என்று எழுதினார் முத்தமிழறிஞர் கலைஞர்.

இப்படி தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய மூவரையும் ஈர்த்தவர் பாவேந்தர் .

பாவேந்தர் என்றால் தமிழியக்கம். தமிழியக்கம் என்றால் பாவேந்தர்.

**“எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழென்று சங்கே முழங்கு**
**எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்**
**இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே!**
**பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்**
**சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு”** - என்று முழங்கியவர் புரட்சிக்கவி.

திராவிடம் - தமிழும் ஆகிய இரண்டும் ஒரே பொருள் தரும் இருவேறு சொற்கள் என்பதை மிகத் தெளிவாகச் சொன்னவர் பாவேந்தர்.

**‘திராவிடத்தின் தீமை எலாம்**
**திராவிடரின் தீமை என்க**
**திராவிடத்தின் நலமெல்லாம்**
**திராவிடரின் நலமென்க’ என்றவர் அவர்.**

**“திராவிடத்தை மீட்பீர் - நம் செந்தமிழை மீட்பீர்”** என்று சேர்த்துச் சொன்னார் பாவேந்தர்.

அத்தகைய பாவேந்தர் பெயரால் ஒருவார காலம் தமிழ் வார விழா நடத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்த அரசாணை, தமிழாணை ஆகும். **‘தமிழாய்ந்த தமிழன் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்’** என்ற பாவேந்தரின் கனவு நனவாகிய காலமாக இது அமைந்துள்ளது.

**“கோட்டை நாற்காலி இன்றுண்டு நாளை**
**கொண்டுபோய் விடுவான் திராவிடக் காளை**
**கேட்டை விசாரித்துத் திராவிடர் கொள்கையைச்**
**கிள்ள நினைப்பது மடமையாம் செய்கை”** - என்று எழுதியவர் பாவேந்தர். அத்தகைய திராவிடக் காளை ஆட்சி நடக்கிறது. பாவேந்தரின் மாட்சி பரவுகிறது.

••




தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள் நேற்று (28.4.2025) ஆளுநர் மாளிகையில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், மனோ தங்கராஜ் அவர்களுக்கு பால்வளத்துறை அமைச்சராகப் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இந்நிகழ்வில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (28.4.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், பால்வளத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட மனோ தங்கராஜ் சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ. பெரியசாமி, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் டி.கே.எஸ். இளங்கோவன், ஆர்.எஸ். பாரதி, கழக துணை அமைப்பு செயலாளர் ஆஸ்டின், தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தின் தலைவர் சுரேஷ் ராஜன், காங்கிரஸ் சட்டமன்ற கட்சித் தலைவர் ராஜேஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரின்ஸ், திருமதி தாரகை கத்பட், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ஆர். மகேஷ், ஆகியோர் உள்ளனர்.

### இன்று 135-வது பிறந்த நாள்:

# பாவேந்தர் திருவுருவச் சிலைக்கு மாலை!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அணிவிக்கிறார்!

**சென்னை, ஏப். 29 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 135வது பிறந்த நாளாகிய இன்று (29.4.2025) காலை 9.15 மணி அளவில், சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.**

“பாவேந்தர்” பாரதிதாசன் அவர்கள் 29.4.1891 அன்று புதுச்சேரியில் கனகசபை - இலக்குமி அம்மாள் இணையரின் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் ‘கனகசுப்பு ரத்தினம்’. இவர் தமது இளம் வயதிலிருந்து தமிழ் மொழி மீது தணியாத தாகமும் பற்றும் கொண்டிருந்தார். 1946 ஆம் ஆண்டு “அமைதிஊமை” என்ற நாடகத்திற்காக “தங்கக்கிளி பரிசு” வென்றார். மகாகவி பாரதியார் அவர்கள் புதுவையில் தங்கியிருந்தபோது, அவருடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். பாரதியாரின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டு அவர் போலவே இனிய கவிதைகளை எழுதிக் குவித்தார். பாரதியார் அவர்களைத் தம் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டு, பாரதிதாசன் எனத் தம் பெயரையே மாற்றிக் கொண்டார்.

பாரதிதாசன் ஒரு தமிழாசிரியர், தமிழ்க் கவிஞர், அரசியல்வாதி, திரைக்கதை ஆசிரியர், எழுத்தாளர் என்று பல்வேறு துறைகளில் தமிழ் மொழியின் இனிமையை மக்களிடம் எடுத்துச் சென்றவர். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 86க்கும் மேற்பட்ட நூல்கள், கதைகள், கட்டுரைகளைப் படைத்துள்ளார். ‘பிசிராந்தையார்’ நாடகத்திற்காக 1970ஆம் ஆண்டில் அவருக்கு, ‘சாகித்திய அகாடமி விருது’ வழங்கப்பட்டது.

‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு’, “தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” எனும் தேன்சுவை சொட்டும் பாடல்கள் பல படைத்துள்ளார். தம் படைப்பாற்றல் மூலம் தமிழுக்குப் பல வழிகளில் தொண்டாற்றி, தமிழ் இனத்திற்கு எழுச்சியூட்டிய பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் 74 ஆண்டுகள் வாழ்ந்து 21.4.1964 அன்று இயற்கை எய்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் தொடங்கி 1942ஆம் ஆண்டில் முதல் ஆண்டு விழாவைக் கொண்டாடியபோது அவ்விழாவிற்காக, பாவேந்தர் பாரதி தாசன் “கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம் கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக்கூட்டத்தை” எனும் புகழ்வாய்ந்த வரிகள் அமைந்த வாழ்த்துக் கவிதையை எழுதி அனுப்பினார். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தாம் கதை வசனம் எழுதிய, “பராசக்தி” திரைப்படத்தின் தொடக்கத்தில் “வாழ்க வாழ்கவே வளமார் எமது திராவிட நாடு” எனும் புரட்சிக் கவிஞரின் பாடலை அமைத்து பாவேந்தர் பாரதிதாசன் அவர்களைப் பெருமைப்படுத்தினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தம் ஆட்சிக் காலத்தில் 1990 ஆம் ஆண்டு பாவேந்தர் பாரதி தாசன் நூற்றாண்டு விழாவை ஓராண்டு காலம் அரசு சார்பில் சிறப்பாகக் கொண்டாடச் செய்தார். திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில், பாவேந்தரின் நூற்றாண்டு விழாவைத் தொடங்கிவைத்து, அவ்விழாவில் அவரது முழுவுருவச் சிலையைத் திறந்துவைத்து மகிழ்ந்தார். அத்துடன், புரட்சிக்கவிஞர் நூல்கள் அனைத்தையும் அரசுடைமையாக்கி அவரது மரபுரிமையருக்கு ரூபாய் 8 இலட்சம் பரிவுத்தொகை வழங்கினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் முயற்சியால், 2001 ஆம் ஆண்டு பாரதிதாசன் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசனை “தன்மான இயக்கத்தின் ஒப்பற்ற பாவலர்” என்றும், பேரறிஞர் அண்ணா அவர்களால் ‘புரட்சிக் கவிஞர்’ என்றும் போற்றிப்புகழ்ந்துள்ளனர்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் சென்னையில் கொண்டாடப்பட்ட இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது கடற்கரை காமராசர் சாலையில் 2.1.1968 அன்று பாவேந்தர் அவர்களின் சிலை திறந்து வைக்கப்பட்டது.

**முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி தமிழ் வார விழா!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ் இனத்தின் மறுமலர்ச்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களைப் போற்றும் வகையில், அவர் பிறந்த நாளான ஏப்ரல் திங்கள் 29ஆம் நாள் முதல் மே 5ஆம் நாள் வரை தமிழ்நாடு முழுவதும் “தமிழ் வாரம்” கொண்டாடப்படும் என தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி, தமிழ்நாடு முழுவதும் தமிழ் வாரம் கொண்டாடப்படுகிறது.

ஆண்டுதோறும் “பாவேந்தர்” பாரதிதாசன் அவர்களின் பிறந்த நாள் தமிழ்நாடு அரசின் சார்பில் அரசு விழாவாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுவதைத் தொடர்ந்து, இந்த ஆண்டின், பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் 135வது பிறந்த நாளாகிய 29.4.2025 அன்று காலை 9.15 மணியளவில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, மெரினா கடற்கரை, காமராசர் சாலையில் அமைந்துள்ள அவருடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

இந்த விழாவில், துணை முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.



போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களை நேற்று (28.4.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர்/தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ். அனீஷ் சேகர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷ மஹாஜன், மற்றும் உயர் அலுவலர்கள் மரியாதை நிமித்தமாக சந்தித்தனர்.